# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :27 July 2025*
கோட்டை:7 வாயில்:27 ஜூலை 2025

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**
Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**
Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**
Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**
Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**
Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**
Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**
Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**
Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**
Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


குறுந்தொகைப் பாடல்களில் உளவியல் பகுப்பாய்வு அணுகுமுறை
முனைவர் இரா.ஜெய்சங்கர்

புறநானூற்றுப் பாடல்களில் ஔவையாரின் ஆளுமைத்திறன்
முனைவர் அ.சேமலா வசந்தா

ஐங்குறுநூற்றில் பாணர்
தே. சுதா

தொல்காப்பியம் காட்டும் நிறக்கோட்பாடுகள்
க.சுவாதி

சங்க இலக்கியங்கள் சுட்டும் களவு கோட்பாடுகள்
ஏ. தீபா

சிலம்பில் இயற்கை
க. மங்கையர்க்கரசி

மணிமேகலையில் மனிதநேயம்
பெ. ஜோதி,

இலக்கியங்களில் விருந்தோம்பல் பண்பு
முனைவர் ஏ.சித்ரா

பண்டைய தமிழர்களின் மணமுறைச் சடங்குகள்
முனைவர் கி.சரண்யா

ஆற்றுப்படைகலைஞர்களின் அறம்
கு. சிந்து

பண்டைகாலத்து தமிழக மக்களின் வாழ்க்கைமுறை
ம. துர்க்காதேவி

ஒரு சொல் பல பொருள் - வேர்ச்சொல் வழி விளக்கம் அறிதல்
முனைவர் ஆ. செந்தமிழ்க்கோதை

வள்ளுவர் கூறும் வாழ்வியல் அறம்
முனைவர். நா. ஹேமமாலதி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**தமிழர் நிலத்தில் பாலையும் ஒட்டகமும்**
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

**தமிழ் மொழியில் வெளிப்படும் கணிதவியல் கூறுகள்**
முனைவர்.அ.ரேவதி

**தமிழர் மரபும் வாழ்வியலும்**
பொ. அகத்திய பாலா

**தமிழ்ச் சமூகத்தில் நாட்டுப்புறத் தெய்வங்கள்**
முனைவர் வ.மோகனப்பிரியா

**பெரியபுராணத்திற்கு அணிசெய்யும் சிலேடையணி**
வே.வெ.சுஜாதா

**கூற்றுகளில் மெய்ப்பாடு புலப்படும் விதம்**
மேபல் சுபிதா த.

**பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் அவர்தம் நாட்டியக் கலைப்பணியும்**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**உலாப்பிரபந்தங்களில் நாட்டியசாஸ்திரம் கூறும் அஷ்டவித நாயகிகளின் வகிபங்கு**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**நாட்டுப்புற வழக்காறுகள் நோக்கில் கானகன் நாவல்**
ர.விண்ணிலவு1, முனைவர் அ. மரிய செபஸ்தியான்2

**சங்கக் கால திணை பதிவுகளின் இடையர் இன மக்களின் சமூக வாழ்க்கையும் கீதாரி நாவலில் இடையர் வாழ்வியல்**
ஓர் ஒப்பாய்வு- சே.நிர்மலா1, முனைவர் அ.மரிய செபஸ்தியான்2

**வேள்பாரி புதினத்துள் அகநானூற்று காட்சிகள்**
ர.கிருஷ்ணவேணி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**சைகோன் - புதுச்சேரி புதினம் முன்னிறுத்தும் காலனிய ஆணாதிக்கமும், பின்காலனியப் பெண்ணியமும்**
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

**கவிஞர் எழிலவனின் 'மரவாடியில் ஒரு போதிமரத்தில்' படைப்பாக்க உத்திகள்**
சி.ஆர்த்தி

**தேனி சீருடையான் புதினங்களில் வெளிப்படும் பெண்களின் நிலை**
பி.தீபாவதி

**கீரனூர் ஜாகிர் ராஜா புதினங்களில் இஸ்லாமியர் பண்பாடு**
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

**உரிப்பொருள் உணர்த்தும் கவிஞர் சுகிர்தராணி கவிதைகள்**
ந.ஸ்டாலின்

**தமிழ்த் திரை இசைப் பாடல்கள்**
கார்த்திக் க

**நிர்வாணமுக்தி சிறுகதை - பெண்மைய விமர்சனம்**
ஜென்சி வை கி

**இன்றைய நாளிதழ்களில் தலையங்கங்கள்**
சே. வனிதா

**Historical And Archaeological Impact Of Palayarai**
Dr.S.Neelavathy

**Chola's Temples As A Social Organization**
A Study - S. Mala

**A Statue Of Prakara At The Kumbakonam Nageswara Temple**
M. Amirthavalli


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி



# தமிழ்

# இன்றைய நாளிதழ்களில் தலையங்கங்கள்

# *Editorials in Daily Newspapers*

***Author*: *S. Vanitha***, *Full time Research scholar,*
*ORCid:* [https://orcid.org/0009-0003-7735-3269](https://orcid.org/0009-0003-7735-3269)

***Guide*: *Dr J. Aruna,*** *Assistant professor,*
*Department of Tamil, Bishop Heber College (Autonomous A++),*
*Affiliated to Bharathasan University, Trichy, Tamilnadu, India.*
*ORCid:* [https://orcid.org/0009-0000-4881-3164](https://orcid.org/0009-0000-4881-3164)

***Abstract***

*This research article, titled `Editorials in Today's Newspapers', discusses newspapers, which can be described as one of the types of magazines, and the editorial, which can be described as the primary element of their content. This special editorial section acts as the heart of the magazines. The important events of the country are editorialized by the magazines. In particular, problematic news is editorialized and it also provides a solution to eliminate printing. The objectives of the editorial are determined by the nature of the news taken. Most of the newspapers are publishing such special editorial sections. In particular, this article is published in the currently published Dinathanthi and Dinamalar. It provides examples of daily newspapers such as Hinduthamish, Dinamani, Dhinakaran, Murasoli, Namavu Amma, Theekkadir, Makkal Kura, Vanakam India, Bharatha Malar, and Maali Malar and how editorials are published in them.*

***Keywords***: *Daily newspaper, editorial, journalism, Dinathanthi, Dinamalar, Hindu Tamil, Dinamani, weekly, news*

**கட்டுரையாளர்: சே. வனிதா, *Reg.No.05696/Ph.D.K6/Tamil/Full Time/April 2018/Date: 04.04.2018.***

முனைவர் பட்ட ஆய்வாளர்

**நெறியாளர்: முனைவர் ஜா. அருணா,**

உதவிப்பேராசிரியர்,

தமிழாய்வுத்துறை, பிஷப்ஹீபர்கல்லூரி (தன்னாட்சி *A++*),

பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப்பெற்றது,

திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய நாளிதழ்களில் தலையங்கங்கள் என்ற இவ்வாய்வுக் கட்டுரையானது, இதழ்களின் வகைகளில் ஒன்றாக விளக்கக் கூடிய நாளிதழ்கள் குறித்தும் அவற்றின் உள்ளடக்கக் கூறுகளில் முதன்மையானதாக விளக்கக் கூடிய தலையங்கம் குறித்தும் விளக்குகிறது. இத்தகைய சிறப்புக்குரிய தலையங்கம் பகுதியானது இதழ்களின் இதயமாக செயல்படுகிறது. நாட்டின் முக்கிய நிகழ்வுகள் இதழ்களால் தலையங்கமாக்கப்படுகிறது. குறிப்பாக, சிக்கலுக்குரியச் செய்திகள் தலையங்கமாக அமைவதோடு, அச்சிக்கலைப் போக்குவதற்கானத் தீர்வினையும் வழங்குகிறது. எடுத்துக்கொண்டச் செய்திகளின் தன்மைக்கேற்ப தலையங்கத்தின் நோக்கங்கள் அமைகின்றன. இத்தகைய சிறப்புக்குரிய தலையங்கப் பகுதியினை பெரும்பாலான நாளிதழ்கள் வெளியிட்டு வருகின்றன. குறிப்பாக, இக்கட்டுரையானது தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் தினத்தந்தி, தினமலர், இந்துதமிழ், தினமணி, தினகரன், முரசொலி, நமது அம்மா, தீக்கதிர், மக்கள் குரல், வணக்கம் இந்தியா, பாரத மலர், மாலை மலர் போன்ற நாளிதழ்கள் குறித்தும் அவற்றில் தலையங்கம் இடம்பெறும் விதத்தினையும் உதாரணத்துடன் எடுத்துரைக்கிறது. மேலும் கட்டுரையின் நிறைவில் முடிவுரை மற்றும் துணை நின்ற நூல்கள் குறித்த விவரங்களும் தரப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** நாளிதழ், தலையங்கம், இதழியல், தினத்தந்தி, தினமலர், இந்து தமிழ், தினமணி, வார இதழ், செய்திகள்

**முன்னுரை**

தகவல் பரிமாற்றத்தில் முக்கிய பங்கு வகுக்கக் கூடிய இதழ்கள் ஆங்கிலேயரின் வருகையால் தோற்றம் பெற்றன. தொடக்கத்தில் அரசு பற்றியும் பின்னர் விடுதலையுணர்வு மற்றும் வணிகம் குறித்தும் செய்திகளை வெளிபட்டு வந்த இதழ்கள், விடுதலைக்குப் பின்பு இலக்கியம், அறிவியல், சமுதாய முன்னேற்றம் என துறை வாரியாகச் செய்திகளை வெளியிடத் தொடங்கின. மக்கள் மத்தியில் இதழ்கள் நன்கு வளர்ச்சிப் பெறவே நாளிதழ், வார இதழ், திங்களிதழ், வாரம் இருமுறை இதழ்கள், மும்முறை இதழ்கள், மாதம் இருமுறை மற்றும் மும்முறை இதழ்கள், காலாண்டு அரையாண்டு மற்றும் ஆண்டு இதழ்கள் என கால அடிப்படையில் வெளிவரத் தொடங்கின. இவ்வாய்வுக் கட்டுரையானது, மேற்க்கூறப்பட்ட வகைகளில் ஒன்றான நாளிதழ்கள் குறித்தும் அவற்றில் வெளிவரும் தலையங்கம் குறித்தும் ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு அமைகிறது.

**நாளிதழ்கள்**

அன்றாடம் நடைபெறும் செய்திகளை உடனுக்குடன் வெளியிட்டு வரும் இதழ்கள் நாளிதழ்கள் ஆகும். "ஒவ்வொரு நாளும் வெளியிடப்படும் செய்தி இதழ்களை நாளிதழ்கள், நாளேடுகள், தினசரிகள் எனலாம். காலையில் வெளியிடப்பட்டால் காலை இதழ் என்றும், மாலையில் வெளியிடப்பட்டால் மாலை இதழ் என்றும் அழைக்கப்படுகின்றன" (தகவல் தொடர்பியல், ப.77) என்று ச.ஈஸ்வரன் நாளிதழ்கள் குறித்து குறிப்பிட்டுள்ளார். தினத்தந்தி, தினமலர் மற்றும் இந்து தமிழ் போன்றவை காலை இதழ்கள் ஆகும். மாலை மலர், மாலை முரசு மற்றும் தமிழ் முரசு போன்றவை மாலை இதழாகும்.

**தலையங்கம்**

இதழ்களுக்கு என்று சில இன்றியமையாப் பகுதிகள் உள்ளன. அவை தலையங்கம், செய்திகள், ஆசிரியருக்குக் கடிதம், உலகச் செய்திகள், வட்டாரச் செய்திகள், கருத்து விளக்கப்படம், விளையாட்டுப் பகுதி, மதிப்புரை, ராசிபலன், திரை உலகச் செய்திகள், இன்றைய நிகழ்ச்சி, விளம்பரங்கள், வேடிக்கைத் துணுக்குகள், கதை, கட்டுரைகள், மார்க்கெட், வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல் போன்றவை ஆகும்.

மேலே கூறப்பட்ட இன்றிமையாப் பகுதிகளின் முதன்மையானதாக தலையங்கம் விளங்குகிறது. இன்றையச் சூழலில் தலையங்கத்தின் அவசியம் உணர்ந்து இதழ்கள் தலையங்கத்தினை வெளியிட்டு வருவதைக் காணமுடிகிறது.

தலையங்கத்தின் நோக்கம் குறித்து, சு.சக்திவேல் அவர்கள் "விமர்சனம் செய்வதும் உண்மையைக் கொணர்வதும் சிக்கலைத் தீர்ப்பதும் தலையங்கத்தின் நோக்கமாகும்" (இதழியல், ப.99) என்று குறிப்பிட்டுள்ளார். பொது மக்களின் கருத்தை வெளிப்படுத்துவதே தலையங்கத்தின் முதன்மையான நோக்கமாகும்.

இதழாசிரியருக்கும் வாசகர்களுக்கும் இடையே கருத்துப் பரிமாற்றம் செய்துக்கொள்ளும் இடமாக தலையங்கம் விளங்குவதை, நா.வேலம்மாள், "இதழ்களில் பல்வேறு செய்திகள் இடம்பெற்றாலும் இதழாசிரியர் வாசகர்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்துக்கொள்ளும் இடமாகத் தலையங்கம் அமைந்திருக்கிறது" (தமிழ் இதழ்களில் கட்டமைப்புக் கூறுகள், ப.70) என்று குறிப்பிடுவதன் மூலம் அறியமுடிகிறது.

தலையங்கமானது எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்து, "தலையங்கத்தில் இன்னச் செய்திகளைப் பற்றித்தான் எழுத வேண்டும் என்று வரையறுப்பது கடினம். பொதுவாக அரசியல் பிரச்சினைகளும் சமுதாயச் சீர்கேடுகளும், அரசின் போக்கும் தலையங்கத்திற்குக் கருப்பொருளாவதுண்டு. முந்தைய நாட்களின் முதன்மைச் செய்திகளும்

தலையங்கப் பொருட்கள் ஆவதுண்டு'' (தமிழ் இதழ்களில் கட்டமைப்புக் கூறுகள், ப.72) என்று நா.வேலம்மாள் குறிப்பிட்டுள்ளதன் மூலமாக அறியமுடிகிறது.

செய்தியிலிருந்து தலையங்கமானது எவ்வாறு வேறுபட்டு காணப்படுகிறது என்பதைப் பற்றி எம்.ஆர்.இராமநாதன், "செய்தி வேறு, தலையங்கம் வேறு. உள்ளது உள்ளபடி தெரிவிக்கப்படுவது செய்தி. ஆய்வுச் செய்து கருத்துக்களை வெளியிடும் களம் தலையங்கம்'' (தமிழ் இதழியல் வரலாறு, ப.151) என்று குறிப்பிட்டுள்ளதன் வாயிலாக தெரிந்துக்கொள்ள முடிகிறது. பொதுவாக நாட்டில் நிகழக் கூடிய நிகழ்வினை அப்படியே குறிப்பிடுவது செய்தி என்றால், அச்செய்தி குறித்து ஆராய்ந்து அதன் உண்மைத் தன்மையினைக் குறிப்பிட்டு அதற்கான தீர்வினைச் சுட்டிக்காட்டும் விதமாக அமைவது தலையங்கமாகும்.

**நாளிதழ்களும் தலையங்கங்களும்**

**தினத்தந்தி**

1942இல் சி.பா.ஆதித்தனாரால் தினத்தந்தியானது தோற்றுவிக்கப்பட்டது. பாமர மக்களுக்கும் ஓரளவு கல்வியறிவுப் படைத்தவர்களுக்கும் செய்திகள் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்நாளிதழ் வெளிவந்தது. "கிராமபுறத்து உழவன் கூட நல்ல முறையில் புரிந்துகொள்ளும் மொழியில் செய்திகளை அமைத்துக் கவர்ச்சியானத் தலைப்புகளுடன் தினத்தந்தி கொடுத்து வருகிறது'' (தமிழ் இதழியல் வரலாறு, ப.198) என்று ம.பொ.சி. இந்நாளிதழ் குறித்துப் பாராட்டியுள்ளதாக எம்.ஆர்.இரகுநாதன் குறிப்பிட்டுள்ளார்.

"1948இல் 'தந்தி' என்ற பெயர் தினத்தந்தியாக மாற்றம் பெற்று வெளிவந்தது. 'காலை எழுந்ததும் 'தந்தி' என்று சொல்லும் அளவுக்கு தமிழர்களின் வாழ்வுடன் 'தந்தி' ஒன்றிவிட்டது'' (தகவல் தொடர்பியல், ப.49) என்று ச.ஈஸ்வரன் குறிப்பிட்டுள்ளதன் வாயிலாக, தினத்தந்தி நாளிதழ் தமிழர்களின் வாழ்வுடன் எந்த அளவிற்கு ஒன்றிக் காணப்படுகிறது என்பதை தெரிந்துக்கொள்ள முடிகிறது.

மக்களின் செல்வாக்கைப் பெற்றத் தினத்தந்தி நாளிதழானது, சென்னை, மதுரை, திருச்சி, கோவை, சேலம், நெல்லை, வேலூர், கடலூர், ஈரோடு, நாகர்கோவில், தஞ்சை, திண்டுக்கல், திருப்பூர், புதுச்சேரி, பெங்களூர், மும்பை, துபாய் போன்ற முக்கிய இடங்களிலிருந்து வெளிவருகிறது. தினத்தந்தி நாளிதழ் தலையங்கம், செய்திகள், கருத்து விளக்கப்படம், விளையாட்டுச் செய்திகள் மட்டுமின்றி கன்னித்தீவு, சாணக்கியன் சொல், ஆண்டியார் பாடுகிறார், தினபலன், மக்கள் மேடை தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், தினம் ஒரு தகவல் தெரிந்துக் கொள்ளுங்கள், வெளிநாட்டு விநோதம், மாணவர் ஸ்பெஷல் போன்ற பிற பகுதிகளும் இடம்பெறுகின்றன.

தினத்தந்தி நாளிதழில் தலையங்கமானது நான்காம் பக்கத்தின் இடது ஓரத்தில் இடம்பெற்றுள்ளது. எடுத்துக்கொண்ட பொருளுக்கும் நோக்கத்திற்கும் ஏற்ப கருத்துப்படமானது இடம்பெறுகிறது. இதே பக்கத்தில் கட்டுரைகள், ஆன்மீகம், ஆண்டியார், இன்று நாள் எப்படி என்ற தலைப்புகளின் அடிப்படையில் செய்திகள் இடம்பெறுகின்றன. ஞாயிறு தவிர அனைத்து நாட்களும் தலையங்கமானது வெளிவருவதைக் காணமுடிகிறது. சான்றாக,

தினத்தந்தி நாளிதழில், திங்கட்கிழமை கவர்னர்தான் தூய்மைப்படுத்த வேண்டும் (12.02.2018) என்ற தலைப்பிலும், செவ்வாய்க்கிழமை குரல் எழுப்பினால்தான் நீதி கிடைக்கும் (13.02.2018) என்ற தலைப்பிலும், புதன்கிழமை மகிழ்வூட்டும் மானியவிலை ஸ்கூட்டர் (14.02.2018) என்ற தலைப்பிலும், வியாழக்கிழமை மதுரை மீனாட்சியம்மன் கோவில் பாதுகாக்கப்பட வேண்டும் (15.02.2018) என்ற தலைப்பிலும், வெள்ளிக்கிழமை அதிர்ச்சியளிக்கும் என்ஜினீயரிங் கல்லூரி தேர்வு முடிவுகள் (16.02.1018) என்ற தலைப்பிலும் சனிக்கிழமை உடனடித்தீர்வு காவிரி மேலாண்மை வாரியம் (01.07.2018) என்ற தலைப்பிலும் தலையங்கங்கள் வெளிவந்துள்ளன. தினத்தந்தியில் தலையங்கப் பகுதியானது தலையங்கம் என்ற பெயரிலேயே வெளிவருகிறது.

“தினத்தந்தியில் தலையங்கம் எப்போதாவது வெளிவரும்” (தமிழ் இதழியல் வரலாறு, ப.297) என்று மா.சு.சம்பந்தன் குறிப்பிடுவதன் வாயிலாக, தொடக்ககாலத்தில் தினத்தந்தியில் தலையங்கப் பகுதியானது இன்றையச் சூழலில் வாரத்தின் ஏழு நாட்களில் ஞாயிறு தவிர்த்து மற்ற ஆறு நாட்களும் வெளிவருவது போல் அன்று வெளிவரவில்லை என்பதை அறிய முடிகிறது.

**தினமலர்**

தினமலர் நாளிதழானது டி.விஇராம சுப்பையர் என்பவரால் 1951 ஆம் ஆண்டு செப்டம்பர் 6 ஆம் நாள் தொடங்கப்பட்டது. “செய்திகளை வெளியிடுவதிலும், சிறப்புச் செய்திகளைத் தனித்தலைப்புகளுடன் தருவதிலும் தினமலர் வெற்றிக்கண்டுள்ளது. மலர் என்னும் தன் சிறப்புப் பெயருடன் சிறுவர் மலர், வாரமலர், ஞாயிறு மலர், திரைமலர், நகர்மலர், வேலைவாய்ப்பு மலர், கல்வி மலர், டி.வி. மலர், ராசி மலர், விவசாய மலர், விளையாட்டு மலர் என்று பலவகைச் செய்திகளைத் தனியே வெளியிட்டுப் பலத்த வாசகர் ஆதரவைப் பெற்றுத் திகழ்கிறது” (தமிழ் இதழியல் வரலாறு, ப.200) என்று தினமலர் நாளிதழ் குறித்து எம்.ஆர்.இரகுநாதன் கூறியுள்ளார்.

தினமலர் நாளிதழானது நெல்லையைத் தொடர்ந்து, சென்னை, மதுரை, ஈரோடு, பாண்டிச்சேரி, கோவை, வேலூர், சேலம், நாகர்கோவில் என்று பல்வேறு

மாவட்டங்களிலிருந்து வெளிவரத் தொடங்கியது. செய்திகள், தலையங்கம் மட்டுமின்றி பக்க வாத்தியம், டீக்கடை பெஞ்சு, அக்கம் பக்கம், பேச்சுப்போட்டி அறிக்கை, இது உங்கள் இடம், டவுட் தனபாலு, உரத்தச் சிந்தனை என்ற பிற செய்திகளையும் வெளியிட்டு வருகின்றன.

தினமலர் நாளிதழ் குறித்து கி.இராசா, “செய்திகளுக்குக் கவர்ச்சியான தலைப்புகளை இடுவதில் தினமலருக்கு நிகர் எதுவுமில்லை. மரபுத் தொடர்களையும், பழமொழிகளையும், புகழ்மிகு கவிதை வரிகளையும் தினமலர் வெளியிடும் செய்தித் தலைப்பில் அடிக்கடி காணலாம்” (இதழியல், ப.118) என்று இந்நாளிதழ் குறித்து குறிப்பிட்டுள்ளார்.

தினமலர் நாளிதழில் தலையங்கமானது, இரண்டாம் பக்கத்தின் வலது ஓரத்தில் 'தலையங்ம்' என்ற பெயர் இன்றி 'தினமலர்' என்ற பெயர் முத்திரையோடு இடம்பெறுகிறது. 'காலம், கருத்து, வர்த்தகம்' என்ற பெருந்தலைப்பின்கீழ் தலையங்கம் மட்டுமின்றி இன்றைய ராசிபலன் மார்கெட் நிலவரம் போன்ற பிற பகுதிகளும் இடம்பெறுவதைக் காணமுடிகிறது. தினமலர் நாளிதழில் வாரத்தின் ஏழு நாட்களும் தலையங்கப் பகுதியானது வெளிவருகிறது. சான்றாக தினமலர் நாளிதழில் திங்கட்கிழமை 'மருத்துவத்தில் மதிப்பெண்' (12.02.2018), செவ்வாய்க்கிழமை 'சமரசம் உலாவும் தேசத்தில்' (13.02.2018), புதன் கிழமை 'சின்னத்தீவு இன்று சீனத்தீவு' (14.02.2018), வியாழக்கிழமை 'பாபுவிடம் கற்க வேண்டிய பாடம்' (15.02.2018), வெள்ளிக்கிழமை 'ஆட்சியாளருக்கு என்ன பாதிப்பு?' (16.02.2018), சனிக்கிழமை 'தேசிய மயமே தீர்வு' (17.02.2018), ஞாயிற்றுக்கிழமை 'வங்கி ஊழியரை பிடிங்க' (18.02.2018) என வாரத்தின் ஏழு நாட்களும் தலையங்கமானது வெளிவருகிறது.

**இந்துதமிழ்**

தி இந்து தமிழ் நாளிதழானது 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் 16 அன்று வெளிவந்தது. சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கக் கூடிய இந்நாளிதழ், தி இந்து ஆங்கில நாளிதழின் ஒரு அங்கமாகும். தி இந்து நாளிதழின் தமிழ் பதிப்பானது ஜூலை 2018லிருந்து 'இந்து தமிழ் திசை' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு வெளிவரத் தொடங்கியது.

'இந்து தமிழ் திசை' நாளிதழானது தமிழகம், இந்தியா, உலகம், வணிகம், விளையாட்டு, சிந்தனைக் களம், சினிமா, பொதுச் சமூகம் போன்ற தலைப்புகளிலும் சிறப்புக் கட்டுரைகள், கலைஞர் பக்கம், கல்வி, தொழில் நுட்பம், நலமே நாடி, சுற்றுச்சூழல், ஆன்மீகம் போன்ற துணைத் தலைப்புகளிலும் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

இந்து தமிழ் நாளிதழானது ஞாயிறு தவிர வாரத்தின் மீதி ஆறு நாட்களிலும் தலையங்கப் பகுதியினை வெளியிட்டு வருகின்றன. திங்கட்கிழமையில் ஆறாம் பக்கத்திலும்,

மீதி நாட்களில் எட்டாம் பக்கத்திலும் வெளிவருகின்றன. இந்து தமிழ் நாளிதழானது தனக்கே உரிய பெயர் முத்திரையோடு தலையங்கம் என்ற பெயர் குறிப்பிடப்படாமல் உண்மை நின்றிட வேண்டும் என்ற வாசகத்துடன் வெளிவருவதைக் காணமுடிகிறது. கருத்துப் பேழை என்ற தலைப்பின்கீழ் தலையங்கம் மட்டுமின்றி அதே பக்கத்தில் மூன்று கட்டுரைகளும் இடம்பெறுகின்றன. சான்றாக,

இந்து தமிழ் திசை நாளிதழில் திங்கட்கிழமை சாதிப் பஞ்சாயத்துகளின் அத்துமீறல்களை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் (12.02.2018), செவ்வாய்க்கிழமை கோவா சுரங்க உரிமங்கள் ரத்து: சரியானத் தீர்ப்பு! (13.02.2018), புதன் கிழமை சுகாதாரக் குறியீட்டெண் பட்டியல் உணர்த்தும் முக்கியச் செய்திகள்! (14.02.2018), வியாழக்கிழமை நிலக்கரி பற்றாக்குறை: குளறுபடிகளுக்குத் தீர்வு எப்போது? (15.02.2018), வெள்ளிக்கிழமை வனங்களை வளர்ப்பது மட்டுமல்ல; அழிக்காமல் காப்பது முக்கியம்! (16.02.2018) , சனிக்கிழமை தமிழகச் சட்டமன்ற விவாதங்கள் நூலாக வேண்டும் (17.02.2018) என வாரத்தின் (ஞாயிறு தவிர) ஆறு நாட்களும் தலையங்கமானது வெளிவருகிறது.

**தினமணி**

தினமணி நாளிதழானது அரையணா விலையில் எட்டுப் பக்கங்களுடன் 1934 செப்டம்பர் 11 ஆம் தேதி பாரதியாரின் நினைவு நாளன்று வெளிவந்தது. இவ்விதழின் துணையாசிரியர்களாக டி.எஸ்.சொக்கலிங்கம், ஏ.என்.சிவராமன், ஏ.ஜி.வெங்கடாச்சாரி, புதுமைப்பித்தன் முதலியோர் பணியாற்றியுள்ளனர்.

தினமணியின் சிறப்புக் குறித்து, “தினமணி இன்று இதழியல் உலகில் புகழ் பெற்று விளங்குகிறது. தினமணி பற்றிய ஆய்வேடுகளும் வந்து கொண்டிருக்கின்றன. நாளிதழ்களில் தரமான நாளிதழ் தினமணி என அனைவரும் பாராட்டுகின்றனர்” என்று சு.சக்திவேல் (இதழியல், ப.46) குறிப்பிட்டுள்ளார்.

“தமிழ் இதழியல் வரலாற்றில் தினமணிக்கு என்று தனி இடம் உண்டு. ஏ.ஜி.வெங்கடாசாரியார், என்.ராமரத்தினம், டி.வி.கணேசன், சி.பி.சேஷாத்திரி, கே.ஆர்.வாசுதேவன், கி.கஸ்தூரி ரங்கன், ஏ.என்.சிவராமன், இராவரம் மகாதேவன் போன்ற பத்திரிகை உலக ஜாம்பவான்கள் ஆசிரியராகத் தினமணியில் பணியாற்றியுள்ளனர்” (தமிழ் இதழியல் வரலாறு, ப.195) என்று எம்.ஆர்.இரகுநாதன் தினமணியில் பணியாற்றிய புகழ்பெற்ற இதழாசிரியர்கள் குறித்துப் பாராட்டியுள்ளார்.

தினமணி நாளிதழில் தலையங்கமானது, திங்கள், புதன், வெள்ளி, சனி ஆகிய நாட்களில் ஆறாம் பக்கத்திலும், செவ்வாய், வியாழன் ஆகிய நாட்களில் எட்டாம் பக்கத்திலும் இடம்பெறுகின்றன. ஞாயிற்றுக்கிழமை தலையங்கம் வெளிவருவது கிடையாது.

“தமிழ் நாளிதழ்களில் தினமணியின் தலையங்கத்திற்கு தனிச்சிறப்பு உண்டு. தினமணியில் மிகவும் தரமான கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன” (தமிழ் இதழியல் வரலாறு, ப.197) என்று எம்.ஆர்.இரகுநாதன் தினமணியின் தலையங்கம் குறித்து குறிப்பிட்டுள்ளார். தலையங்க பகுதியானது இவ்விதழில் 'தலையங்கம்' என்ற பெயர் குறிப்பிடப்படாமல் வெளிவருகிறது. இவ்விதழ் முதன்மைத் தலையங்கத்தினை மட்டுமே வெளியிட்டு வருகின்றன. சான்றாக,

உறுமுவதால் பயனில்லை (திங்கள், 14.09.2020), உணர்கிறோமா பேராபத்தை (செவ்வாய், 15.09.2020), உணர்வோம் உண்மை நிலையை! (புதன், 16.09.2020), சீனாவின் தகவல் திர(ரு)ட்டு! (வியாழன், 07.09.2020), பயோ பபுள்ஸ் கிரிக்கெட்! (வெள்ளி, 18.09.2020), இயற்கை விடுக்கும் எச்சரிக்கை (சனி, 19.09.2020), ஞாயிறு (20.09.2020) தலையங்கம் இடம்பெறவில்லை.

“உலகம் செய்திகள், உள்நாட்டுச் செய்திகள், விளக்கக் கட்டுரைகள், 'தினமணி'யில் வெளியாகிறது. ஞாயிறுத் தவிர பிற நாட்களில் தலையங்கமும், துணைத் தலையங்கமும் எழுதப்படுகிறது” (தமிழ் இதழியல் வரலாறு, ப.297) என்று மா.சு.சம்பந்தன் குறிப்பிடுவதன் வாயிலாக, தினமணி தொடக்கக் காலத்தில் துணைத் தலையங்கங்களை வெளியிட்டு வந்துள்ளதை அறியமுடிகிறது. ஆனால் தற்போது தினமணி துணைத் தலையங்கத்தினை வெளியிடுவதில்லை என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**தினகரன்**

1977 முதல் தினகரன் நாளிதழானது சென்னையிலிருந்து வெளிவரத் தொடங்கியது. உள்ளூர் மற்றும் வட்டாரச் செய்திகள், சட்டமன்றச் செய்திகளுடன் 'உலகம் உங்கள் கையில்' என்ற தலைப்பின்கீழ் உலகச் செய்திகளை தினந்தோறும் வெளியிட்டு வருவதாக இரகுநாதன் 'தமிழ் இதழியல் வரலாறு' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். சென்னை மட்டுமின்றி பாண்டிச்சேரி, வேலூர், கோவை, திருச்சி, மதுரை, நெல்லை, நாகர்கோவில், பெங்களூர் ஆகிய இடங்களிலிருந்து வெளிவருகிறது.

தினகரன் நாளிதழில் தலையங்கமானது வாரத்தின் ஏழு நாட்களும் இரண்டாம் பக்கத்தில் 'தலையங்கம்' என்ற பெயரின்றி வெளிவருகிறது. தலையங்கம் இடம்பெறும்

இரண்டாம் பக்கத்தில் வரி விளம்பரங்கள், மாவட்டச் செய்திகள், இன்றைய பலன்கள், அணை நிலவரம் போன்ற பிற செய்திகளும் இடம்பெறுகின்றன. உதாரணமாக,

தோண்டத் தோண்ட பூதம் (திங்கள், 14.09.2020), கெடுபிடிகள் தேவையா? (செவ்வாய், 15.09.2020), மக்கள் மறக்க மாட்டார்கள் (புதன், 16.09.2020), நீட் அரக்கன் (வியாழன், 17.09.2020), வஞ்சிப்பது நியாயமா? (வெள்ளி, 18.09.2020), முக கவசம் முக்கியம் (சனி, 19.09.2020), விவசாயிகளின் எதிர்ப்பு (ஞாயிறு, 20.09.2020).

**விடுதலை**

விடுதலை இதழை முதன் முதலில் 1935 ஆம் ஆண்டு ஜூன் 1 ஆம் தேதி இருவார இதழாக நீதிக்கட்சி வெளியிட்டது. பின்னர் பெரியார் பொறுப்பில் 1937 ஆம் ஆண்டில் நாளிதழாக மாற்றப்பட்டது. பெரியாரின் தமிழ் எழுத்துக்கள் சீர்திருத்தத்திற்கான சோதனைக் களமாக விடுதலை இதழானது விளங்கியது. விடுதலை இதழின் தற்போதைய ஆசிரியர் கி.வீரமணி ஆவார். 'விடுதலை' நாளிதழில் தலையங்கமானது இரண்டாவதுப் பக்கத்தில் 'தலையங்கம்' என்ற பெயரிலேயே ஞாயிறு தவிர மற்ற நாட்களில் வெளிவருகிறது. தலையங்கம் இடம்பெறும் பக்கத்தில் தந்தைப் பெரியாரின் பொன்மொழிகள் மற்றும் பொதுச் செய்திகள் இடம்பெறுவதைக் காணமுடிகிறது. சான்றாக,

அமீரகத்தில் அய்யா விழா! (12.09.2020).

**முரசொலி**

முரசொலி நாளிதழ் 10.08.1994இல் கலைஞர் அவர்களால் துவங்கப்பட்டது. 'இன்றையச் செய்தி நாளைய வரலாறு', 'வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்' என்ற முழக்கத்தோடு வெளிவருகிறது. தொடக்கத்தில் துண்டறிக்கைகளாக வெளிவந்த முரசொலி செப்டம்பர் 17, 1960 முதல் நாளேடாக வெளிவரத் தொடங்கியது.

“வெள்ளைத்தாளில் கலைஞரின் கைவண்ணத்தில் எளிய இனிய தூயத் தமிழில் தி.மு.க.வின் கொள்கைப் பரப்பும் இதழாக வெளிவந்து கொண்டிருக்கிறது” (இதழியல் வளர்ச்சியும் மொழி பெயர்ப்பும், ப.162) என்று முரசொலி இதழ் குறித்து கு.முத்துராசன் இவ்விதழ் குறித்துக் குறிப்பிடுகிறார்.

**நமது அம்மா**

'நமது அம்மா' நாளிதழானது முன்னாள் தமிழக முதலமைச்சரான செல்வி ஜெ.ஜெயலலிதாவின் 70வது பிறந்த நாளான 2018 பிப்ரவரி 24 அன்று சென்னையில் துவங்கப்பட்டது. 12 பக்கங்களைக் கொண்ட 'நமது அம்மா' நாளிதழில் தலையங்கமானது மூன்றாவதுப் பக்கத்தில் 'தலையங்கம்' என்ற பெயர் இன்றி வெளிவருகிறது.

சான்று:

இத்துப்போன கட்சிக்கு

இரண்டு நாள் குத்தாட்டம் (20.05.2019)

**தீக்கதிர்**

தீக்கதில் இதழானது 29 ஜூன் 1964 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. “இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் அதிகாரப்பூர்வ ஏடாக வெளிவருவது தீக்கதிர். ஆரம்பத்தில் வார இதழாக துவங்கப்பட்ட இந்த இதழ் இப்போது தொடர்ந்து தின இதழாக வெளிவந்துக் கொண்டிருக்கிறது” (தமிழ் இதழியல் வரலாறு, ப.125) என்று எம்.ஆர்.இரகுநாதன் குறிப்பிடுவதன் வாயிலாக, தீக்கதிர் இதழானது தொடக்கத்தில் வார இதழாக வெளிவந்து பின் நாளிதழானது மாற்றம் பெற்று வெளிவரும் செய்தியை அறியமுடிகிறது. இந்நாளிதழானது, மதுரை, கோயம்புத்தூர், சென்னை, திருச்சி ஆகிய நகரங்களில் வெளிவருகிறது. திருச்சியில் தீக்கதிர் பதிப்பானது, பொன்மலை சுங்கத் திடலில் நடைபெற்றத் துப்பாக்கிச் சூட்டில் வீரமரணம் அடைந்த 5 தியாகிகளின் நினைவு நாளான செப்.5, 2010இல் துவங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

எட்டுப் பக்கங்களைக் கொண்ட இவ்விதழில் தலையங்கமானது, மூன்றாம் பக்கத்தில் ‘தலையங்கம்’ என்ற பெயர் இன்றி இதழின் பெயரில் வெளிவருவதைக் காணமுடிகிறது. சான்றாக,

‘தேர்தல் ஆணையம் தோற்றுவிட்டது’ (25.05.2019).

**மக்கள் குரல்**

மக்கள் குரல் நாளிதழானது 1973 ஆம் ஆண்டு எம்.சண்முகவேல் தொடங்கப்பட்டது. சண்முகவேல், டி.ஆர்.ராமசாமி ஆகியோரின் தீப்பொறி தலையங்கங்கள் அன்றைய வரலாற்றுச் சிறப்புமிக்கவையாக விளங்கியது. “மக்கள் குரல் தனக்கென்று ஒரு தனி வழியை வகுத்துக் கொண்டுச் சிறப்பாக வெளிவந்து கொண்டிருக்கிறது. இதன் ஆசிரியர் டி.ஆர்.ஆர். தொழிலாளர் முதலீட்டில் தொடங்கப்பட்ட இவ்விதழ் நடுநிலை நாளேடாக வெளிவந்துக் கொண்டிருக்கிறது” (இதழியல் வளர்ச்சியும் மொழிபெயர்ப்பும், ப.162) என்று கு.முத்துராசன் மக்கள் குரல் நாளிதழ் குறித்து குறிப்பிட்டுள்ளார்.

எட்டுப் பக்கங்களைக் கொண்ட ‘மக்கள் குரல்’ என்ற நாளிதழில் தலையங்கமானது இரண்டாம் பக்கத்தில் ‘தலையங்கம்’ என்ற பெயர் இன்றி இதழின் பெயரிலேயே வெளி வருவதைக் காணமுடிகிறது. சான்றாக,

எழில் மிகு தமிழகம்: பொறியாளர்களின் பங்கு (20.05.2020).

மேற்கூறப்பட்ட நாளிதழ்கள் மட்டுமின்றி, வணக்கம் இந்தியா என்ற நாளிதழானது மூன்றாம் பக்கத்திலும், பாரத மலர் என்ற நாளிதழானது இரண்டாம் பக்கத்திலும் மாலை மலர் என்ற நாளிதழானது இரண்டாம் பக்கத்திலும் தலையங்கத்தினை வெளியிட்டு வருகின்றன.

**முடிவுரை**

இதழ்களின் இன்றியமையாப் பகுதியாகத் தலையங்கம் விளங்குகிறது. இதழாசிரியரையும் வாசகரையும் இணைக்கும் பகுதியாகத் தலையங்கம் உள்ளது. இத்தகைய சிறப்புக்குரிய தலையங்கப் பகுதியினை இன்றையச் சூழலில் பெரும்பாலான நாளிதழ்கள் தங்கள் இதழ்களில் வெளியிட்டு வருவதைக் காணமுடிகிறது.

தினமலர், தினகரன், விடுதலை, முரசொலி, பாரத மலர், மக்கள் குரல், மாலை மலர் போன்ற நாளிதழ்கள் இரண்டாம் பக்கத்திலும் வணக்கம் இந்தியா, தீக்கதிர், நமது அம்மா ஆகிய நாளிதழ்கள் மூன்றம் பக்கத்திலும் இந்து தமிழ், தினமணி ஆகிய நாளிதழ்கள் ஆறாம் பக்கத்திலும் தினத்தந்தி நான்காம் பக்கத்திலும் தலையங்கத்தினை வெளியிட்டு வருவதை அறியமுடிகிறது.

தினத்தந்தி, இந்து தமிழ், தினமணி, விடுதலை போன்ற நாளிதழ்கள் ஞாயிற்றுக் கிழமை தலையங்கத்தினை வெளியிடுவதில்லை என்பதை தெரிந்துக் கொள்ள முடிகிறது. தினமலர், தினகரன், முரசொலி, வணக்கம் இந்தியா, பாரத மலர் முதலான நாளிதழ்கள் வாரத்தின் ஏழு நாட்களும் தலையங்கத்தினை வெளியிடுகின்றன.

தலையங்கமானது தினத்தந்தி, விடுதலை ஆகிய இதழ்களில் தலையங்கம் என்ற பெயரிலேயே வெளிவருவதை காணமுடிகிறது. தினமலர், இந்து தமிழ், திசை, தினமணி, தினகரன், முரசொலி, வணக்கம் இந்தியா, பாரத மலர், தீக்கதிர், நமது அம்மா, மாலைமலர், மக்கள் குரல் ஆகிய நாளிதழ்களில் தலையங்கம் என்ற பெயர் குறிப்பிடப்படாமல் இதழ்களின் பெயரிலேயே வெளிவருவதைத் தெரிந்துக் கொள்ள முடிகிறது.

தினத்தந்தி நாளிதழ் மட்டுமே தலையங்கப் பகுதியில் அவற்றின் செய்தி கருத்துக்கு ஏற்ப கருத்துப்படத்துடன் தலையங்கத்தை வெளியிட்டு வருகிறது என்பதை அறியமுடிகிறது. மொத்தத்தில் நாளிதழ்கள் குறித்தும் அவற்றில் தலையங்கம் இடம்பெறும் விதம் குறித்தும் அறியமுடிகிறது.

**துணை நூல்கள்**

1. இரகுநாதன், எம்.ஆர். *தமிழ் இதழியல் வரலாறு.* ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு - 2015.

2. இராசா, கி. *இதழியல்.* தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி.) லிட்., சென்னை, முதற்பதிப்பு - 2005.

3. ஈஸ்வரன், ச. *தகவல் தொடர்பியல்.* பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, முதற்பதிப்பு - 2014.

4. சக்திவேல், சு. *இதழியல்.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 1997.

5. சம்பந்தன், மா.சு. *தமிழ் இதழியல் வரலாறு.* தமிழர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 1987.

6. முத்துராசன், கு. *இதழியல் வளர்ச்சியும் மொழிபெயரப்பும்.* ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, மறுபதிப்பு - 2009.

7. வேலம்மாள், நா. *தமிழ் இதழ்களில் கட்டமைப்புக் கூறுகள்.* தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி.) லிட்., சென்னை, முதற்பதிப்பு, 2008.


### *Reference*


*1. Ragunathan, M. R. Tamil ethaliyal varalaru. Sri senbaga pathipagam, chennai, third edition - 2015.*

*2. Rasa, K. Ethaliyal. Thamarai publications(p.) ltd., chennai, first edition - 2005.*

*3. Eswaran, S. Thagaval thodarbiyal. Pavai publications, chennai, first edition - 2014.*

*4. Sakthivel, S. Ethaliyal. Manivasagar pathipagam, chennai, first edition - 1997.*

*5. Sampathan, M. S. Tamil ethaliyal varalaru. Tamilar pathipagam, chennai, first edition - 1987.*

*6. Muthurasan, K. Ethaliyal valarchium molipeyarpum. Ithinai pathipagam, chennai, marupathipu - 2009.*

*7. Velammal, N. Tamil ethalkalil kattamaipu kurugal. Thamarai buplications (p. )ltd., chennai, first edition, 2008*

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2025, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com